முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை :– திருமதி. P. சுதா, B.Com., B.L.,
முதன்மை உதவி அமர்வு நீதிபதி,

திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 16 ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள், திங்கள்கிழமை

**அமர்வு வழக்கு எண்.24/2023**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>மயிலாடுதுறை காவல் நிலையம்,<br>குற்ற எண்.1481/2021 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | **எதிரிகள்**<br>A1. ரித்தீஸ், வயது 20–2021,<br>த.பெ. சத்தீயசீலன்<br>தெற்குத் தெரு, முளப்பாக்கம்,<br>மயிலாடுதுறை தாலுக்கா & மாவட்டம்.<br><br>A2. ராஜலெஷ்மி, வயது 41–2021,<br>க.பெ. சத்தீயசீலன்<br>தெற்குத் தெரு, முளப்பாக்கம்,<br>மன்னம்பந்தல்,<br>மயிலாடுதுறை தாலுக்கா & மாவட்டம். |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் | : | A1– 294(b), 326, 307 இ.த.ச.வின் கீழ்<br>A2– 294(b), 324 இ.த.ச.வின் கீழ் |
| குற்றம் சாட்டப்பட்டவர்களின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு | : | A1, A2 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை |
| தீர்ப்பு | : | **முடிவாக,** A1 எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 326, 307 ன் கீழும், A2 எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324 ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கிடமின்றி அரசுத்தரப்பில் மெய்ப்பிக்க தவறியதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து A1 எதிரி |

| | | |
|---|---|---|
| | | சட்டப்பிரிவுகள் 294(b), 326, 307 இதச மற்றும் A2 எதிரி சட்டப்பிரிவுகள் 294(b), 324 இதச., ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயப்பொருளான சி.பி.13/2023–ல் முன்னிலைப்படுத்தப்பட்ட சான்று பொருளான அயிட்டம் எண்.1 சுமார் 8.5 செ.மீ. நீளமும், 10 செ.மீ. அகலமும், சுமார் 6 செ.மீ. உயரமும் உள்ள உடைந்த செங்கல் ஒன்றும், சான்றுபொருளான அயிட்டம் எண். 2 சுமார் 69 செ.மீ. நீளம் உள்ள சவுக்கு உருட்டு கட்டை ஒன்று ஆகியவை எதற்கும் பயன்படாது என்பதால் இவ்வழக்கின் மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழித்திட உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் எதிரிகளாலும் அவர்களது பிணையாளர்களாலும் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைமுறி ஏதேனும் இருப்பின் அவைகள் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின் தானாக ரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு முதலில் மயிலாடுதுறை நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தால் மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அங்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்பு இந்நீமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, அரசு தரப்புக்காக அரசு கூடுதல் குற்றப்பொது வழக்கறிஞர் திரு.P.சிவதாஸ் அவர்களும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.P.V.இளங்கம்பன் அவர்களும் ஆஜராகி, 10.02.2026 அன்று இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்தபோது இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள் வரையில் எனது பரிசீலனையில் வைத்து, இன்றைய தினம் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்....

**தீர்ப்புரை**

இவ்வழக்கின் வாதியான சாட்சி 1 மணிவேலன் என்பவர் கேட்டரிங் படிப்பு முடித்துவிட்டு மயிலாடுதுறை தாலுக்கா, முளப்பாக்கம் தெற்குத் தெருவில் அவரது பெற்றோருடன் வசித்து வருவதாகவும், சாட்சி 1 மணிவேலன் அவரது ஊரைச் சேர்ந்த சத்தீயசீலன் என்பவரது மகள் ரிஸ்வானா என்பவரை சுமார் 2 வருடமாக காதலித்து வந்ததாகவும், அவரது காதலி ரிஸ்வானா மேல் உள்ள பிரியத்தின் காரணமாக அவரது தாயாரும், இவ்வழக்கின் எதிரிகளில் ஒருவரான 2ஆம் எதிரி ராஜலெஷ்மி என்பவருக்கு தவணை பணம் வாங்கி கொடுத்ததாகவும், அந்த பணத்தை ரிஸ்வானா தாயார் ராஜலெஷ்மி தவணை கட்டாததால் சாட்சி 1 மணிவேலன் 2ஆம் எதிரி ராஜலெஷ்மியிடம் பணத்தை திரும்ப கேட்டபோது சாட்சி 1க்கும், ரிஸ்வானாவின் அண்ணனும், எதிரிகளில் ஒருவருமான 1ஆம் எதிரி ரித்தீஷ், 2ஆம் எதிரி ராஜலெஷ்மி ஆகியோர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டதாகவும், இந்நிலையில் சாட்சி 1 மேற்படி 1ஆம் எதிரியின் தங்கையான ரிஸ்வானா என்பவருடன் பழகுவது தெரிந்து A1, A2 எதிரிகள் இருவரும் சாட்சி 1யை கண்டித்ததாகவும், அதன்பிறகு 25.06.2021 ஆம் தேதியன்று மாலை சுமார் 17.00 மணியளவில் சாட்சி 1 அவரது தெருவில் வசிக்கும் ராஜா என்பவரின் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த போது மேற்படி ரிஸ்வானாவிடம் போய் பேசியதாகவும், அதை பார்த்த A1 எதிரி ரித்திஷ் சாட்சி 1யை ஏண்டா எங்க தங்கச்சிகிட்ட பேசுற குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று திட்டி கீழே கிடந்த செங்கல்லை எடுத்து ஓங்கி சாட்சி 1ன் பின்பக்க தலை முன்பக்க நெற்றி ஆகிய இடங்களில் அவரை கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், அதே சமயம் அங்கு வந்த A2 எதிரி ராஜலெஷ்மி சாட்சி 1யை குச்சிகாரி மகனே என் மகளை ஏண்டா தொந்தரவு செய்யுற என்று திட்டி, கட்டையால் சாட்சி 1ன் நெஞ்சி மற்றும் வலது கையில் அடித்து சொறப்காயத்தை ஏற்படுத்தியதாகவும், எனவே A1 எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 326, 307 ன் கீழும், A2 எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324 ன் கீழும் தண்டிக்க தக்க குற்றம் புரிந்ததாக எதிரிகள் மீது மயிலாடுதுறை காவல் நிலைய காவல் ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** மயிலாடுதுறை, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் மேற்படி வழக்கினை மு.ப.வ.எண்.02/2023 ஆக தமது கோப்பில் எடுத்துக் கொண்டு வழக்கில் A1, A2 எதிரிகள் முன்னிலையாகியவுடன் வழக்காவணங்களின் நகல்களை கு.வி.மு.ச.பிரிவு. 209 (அ) ன் கீழ் வழங்கி பரிசீலனை செய்கையில் 307 இதசவின் கீழான குற்றமானது மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றமாக இருந்ததால் இவ்வழக்கினை கு.வி.மு.ச.பிரிவு 209(அ)ன் படி மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளது.

**3.** மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் இவ்வழக்கினை அமர்வு வழக்கு எண்.24/2023 ஆக தமது கோப்பில் எடுத்துக் கொண்டு விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததின் பேரில் இந்நீதிமன்றம் விசாரணை மேற்கொண்டது.

**4.** இந்நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையானவுடன் A1 எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 326, 307 இ.த.ச., மற்றும் A2 எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324 இ.த.ச.. ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் படித்துக் காட்டி விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்ததால் வழக்கு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.16 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட செங்கல் மற்றும் சவுக்கு உருட்டுகட்டை சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட புகார் வாக்குமூலத்தின் சுருக்கம்:-**

புகார்தாரரான மணிவேல் தனது புகார் வாக்குமூலத்தில் அவர்கள் ஊரைச் சேர்ந்த ரிஸ்வானா என்பவரை இரண்டு வருடமாக காதலித்து வந்ததாகவும், மேற்படி ரிஸ்வானா என்பவரின் வீட்டிற்கு தவணைக்கு வாங்கி பணம் கொடுத்து இருந்ததாகவும், கொடுத்த பணத்தை திரும்ப கேட்டபோது புகார்தாரரான மணிவேல் என்பவருக்கும், ரிஸ்வானாவின் அண்ணன் ரித்தீஸ் மற்றும் அவரது அம்மா

ராஜலெட்சுமி ஆகியோர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டதாகவும், இந்நிலையில் புகார்தாரர் ரிஸ்வானாவுடன் பேசுவது தெரிந்து அவரது அண்ணன் மற்றும் அம்மா ஆகியோர் புகார்தாரரை கண்டித்த நிலையில் கடந்த 25.06.2021 ஆம் தேதி சுமார் 5.00 மணியளவில் ரிஸ்வானா அவருடைய மாமா ராஜா என்பவரின் வீட்டின் எதிரில் நிற்பதை பார்த்து அவரிடம் சென்று பேசிக்கொண்டு இருந்தபோது அங்கு வந்த ***ரிஸ்வானாவின் அண்ணன் ரித்தீஷ், ஏண்டா என் தங்கச்சி கிட்ட பேசுற குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே என்று திட்டி, கீழே கிடந்த செங்கல்லை எடுத்து இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி புகார்தாரர் தலையின் பின்பக்கத்திலும், முன்பக்க நெற்றியிலும் அடித்ததாகவும், வலி தாங்காமல் கீழே விழுந்ததும் ரிஸ்வானாவின் அம்மா ராஜலெட்சுமி குச்சிகாரி மகனே என் மகளை ஏண்டா தொந்தரவு செய்யுற என்று சொல்லி அங்கு கிடந்த கட்டையால் என் நெஞ்சு மற்றும் வலது கையிலும் அடித்ததாகவும், புகார்தாரர் வலி தாங்காமல் கீழே விழுந்ததும் ரிஸ்வானாவின் அம்மா ராஜலெட்சுமி குச்சிகாரி மகனே என் மகளை ஏண்டா தொந்தரவு செய்யுற என்று சொல்லி அங்கு கிடந்த கட்டையால் புகார்தாரரின் நெஞ்சு மற்றும் வலது கையிலும் அடித்ததாகவும்***, வலி தாங்க முடியாமல் சத்தம் போட்டதும் அங்கிருந்தவர்கள் சத்தம் போட்டுக்கொண்டு ஓடிவருவதை பார்த்த ரித்தீஷ் மற்றும் ராஜலெட்சுமி இருவரும் சென்றுவிட்டனர் என்றும், தெருகாரர்கள் வரவில்லை என்றால் இருவரும் புகார்தாரரை அடித்து கொலை செய்து இருப்பார்கள் என்றும், இதில் ***காயம் அடைந்த புகார்தாரர் 26.06.2021 ஆம் தேதி அருண்பிரியா மருத்துவமனையிலும், அங்கிருந்து கும்பகோணம் சுபம் மருத்துவமனையிலும், மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும்,*** சிகிச்சையில் இருந்தபோது மயிலாடுதுறை போலீசாரிடம் நடந்த சம்பவங்களை சொல்லி நடவடிக்கை எடுக்குமாறு புகார் வாக்குமூலம் அளித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

6. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u> :–

அ) புகார் வாக்குமூல சாட்சியான அ.சா.1 மணிவேலன் முதல்விசாரணை சாட்சியத்தில் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.1ன் கையெழுத்து

தான் என்றும், 2 ஆம் எதிரியின் மகளும், அ.சா.1 ம் காதலித்து வந்ததாகவும், மேற்படி காதல் எதிரிகளுக்கும் தெரியும் என்றும், 25.06.2021 அன்று முளப்பாக்கம், தெற்கு தெருவில் மாலை 5 மணிக்கு ***எதிரிகள் இருவரும் அ.சா.1 யை குச்சிகாரி மகனே, தேவடியா மகனே என்று திட்டியதாகவும், 1 ஆம் எதிரி செங்கற்களால் அ.சா.1 ன் தலையின் பின்மண்டையிலும், முன்பக்க நெற்றியின் மேல் பக்கத்திலும் அடித்ததாகவும், 2 ஆம் எதிரி அ.சா.1 யை இத்தோடு செத்து போடா என்று சொல்லி, அங்கு கிடந்த கட்டையை எடுத்து அ.சா.1 ன் நெஞ்சிலும், தலையிலும் அடித்ததாகவும்,*** சத்தம் கேட்டு ஊர்காரர்கள் கமல்ராஜ், மதியழகன் மற்றும் சிலர் ஓடி வந்ததாகவும், அடிப்பட்டவுடன் அ.சா.1 யை மயிலாடுதுறையில் உள்ள ***அருண்பிரியா தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து, அங்கிருந்து கும்பகோணம் சுபம் மருத்துவமனையிலும், பிறகு தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், அதன் பின்னர் மேல் சிகிச்சைக்காக பாண்டிசேரி ஜிப்மர் மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டதாகவும்,*** அ.சா.1 தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்த போது போலீசார் அ.சா.1 யை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டதாகவும், தற்போது காண்பிக்கப்படும் தடய பொருட்களான செங்கல் மற்றும் கட்டையால் தான் அ.சா.1 யை எதிரிகள் அடித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ) கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 கமல்ராஜ் முதல் விசாரணை சாட்சியத்தில் சுமார் 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு மாதம், தேதி சரியாக ஞாபகம் இல்லை என்றும், அ.சா.2 காரைக்காலில் தங்கி இருந்ததாகவும், காரைக்காலில் இருந்து ஊருக்கு வந்த போது அக்கம், பக்கத்தில் இருந்தவர்கள் பிரச்சனை என்று கூற கேள்விப்பட்டதாகவும், அவ்வளவு தான் தெரியும் என்றும், சம்பவத்திற்கு பின்பு மயிலாடுதுறை போலீசார் வந்து அக்கம், பக்கத்தில் பிரச்சனை நடந்தது குறித்து விசாரணை செய்து கையெழுத்து வாங்கி சென்றார்கள் என்று அரசுத்தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

இ) பார்வைமகசர் சாட்சியான அ.சா.3 காமராஜ் முதல்விசாரணை சாட்சியத்தில் பார்வை மகசரில் உள்ள கையெழுத்தை சுமார் 3 வருடங்களுக்கு

முன்பு போட்டதாகவும், அதை எங்கு போட்டேன் என்று தெரியாது என்றும், மேற்படி பார்வை மகசரில் இரண்டாவதாக உள்ள கையெழுத்து அ.சா.3 ன் கையெழுத்து தான் என்று கையெழுத்தை மட்டும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்து, அரசுத்தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி பார்வைமகசரில் உள்ள அ.சா.3 ன் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பார்வை மகசர் சாட்சி மூலம் சம்பவயிடம் நிரூபணம் செய்யப்படவில்லை.

ஈ) ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்று மகசர் சாட்சியான அ.சா.4 கல்யாணசுந்தரம் முதல் விசாரணை சாட்சியத்தில் கைப்பற்று மகசரில் இரண்டாவதாக உள்ள கையெழுத்தும், ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவதாக உள்ள கையெழுத்தும் அ.சா.4 ன் கையெழுத்து தான் என்றும், சுமார் ஆறு, ஏழு மாதத்திற்கு முன்பு வேலை செய்யும் இடத்தில் போலீசார் வந்து கையொப்பம் கேட்டதற்கு இணங்க கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், எதற்கு என்று போலீசார் கூறவில்லை என்று கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை மட்டும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்து, அரசுத்தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி கைப்பற்றுமகசரில் இரண்டாவதாக உள்ள அ.சா.4 ன் கையெழுத்து அ.சா.ஆ.3 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவதாக உள்ள அ.சா.4 ன் கையெழுத்து அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

உ) கேள்வியுற்ற சாட்சியான அ.சா.5 சந்திரசேகர் முதல் விசாரணை சாட்சியத்தில் 25.06.2021 அன்று மாலை 7.00 மணியளவில் அ.சா.5 ன் தெருவில் அ.சா.5 ன் வீட்டில் இருந்து இரண்டு வீடு தள்ளி ***அ.சா.5 ன் மகனை ஆஜர் எதிரிகள் கல்லாலும், கட்டையாலும் அடித்ததாகவும், அ.சா.5 அப்போது வெளியே போய்விட்டு வீட்டிற்கு வந்தபோது அவரது மகன் மணிவேலன் சம்பவ இடத்தில் மயக்கமடைந்து கீழே கிடந்தார் என்றும், சம்பவ இடத்தில் அ.சா.5 ன் ஊரைச் சேர்ந்த நபர்கள் நின்று கொண்டிருந்ததாகவும், அவரது மகனை அங்கிருந்து மயிலாடுதுறை, அருண் பிரியா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்து, பின்னர் மேல் சிகிச்சைக்காக கும்பகோணம் சுபம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக*** சாட்சியம்

அளித்துள்ளார். அ.சா.5 ன் சாட்சியத்திலிருந்து அவரது மகனான அ.சா.1 அடிபட்டு, சம்பவயிடத்தில் மயக்கமடைந்து கிடந்துள்ளார் என்பதும், மயக்கநிலையில் இருந்தவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளார் என்பதும் புலனாகிறது. இருந்தபோதிலும் அ.சா.5 ன் சாட்சியத்திலிருந்து அ.சா.1 எதிரிகளால் தான் தாக்கப்பட்டாரா என்பதும், அ.சா.1 ற்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிரிகள் தான் காரணமா என்பதும் அ.சா.5 ன் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை.

ஊ) மற்றொரு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்று மகசர் சாட்சியான அ.சா.6 சம்பந்தம் முதல் விசாரணை சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள கையெழுத்தும், கைப்பற்றுதல் மகசரில் முதலாவதாக உள்ள கையெழுத்தும் அ.சா.6 ன் கையெழுத்து தான் என்றும், அ.சா.6 உடன் கல்யாண சுந்தரம் என்பவர் கையெழுத்து போட்டதாகவும், ***27.06.2021 ஆம் தேதியன்று அ.சா.6 ம், கல்யாண சுந்தரமும் மூங்கில் தோட்டம் பேருந்து நிலையம் அருகே நின்று கொண்டிருந்தபோது மயிலாடுதுறை காவல் துறையினர் ரித்தீஸ் என்பவரை பிடித்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், பின்னர் ரித்தீஸ் வீட்டிற்கு போலீசார் அ.சா.6 யை அழைத்து சென்றதாகவும், அவர் போலீசார் விசாரணையில் என்ன சொன்னார், அவரது வீட்டில் போலீசார் என்ன செய்தார்கள் என்று ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.*** ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.6 ன் கையெழுத்து அ.சா.ஆ.5 ஆகவும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.6 ன் கையெழுத்து அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.6 ன் சாட்சியத்திலிருந்து மூங்கில் தோட்டம் பேருந்து நிலையம் அருகே நின்று கொண்டிருந்தபோது மயிலாடுதுறை காவல் துறையினர் ரித்தீஸ் என்பவரை பிடித்து விசாரணை செய்து, ரித்தீஸ் வீட்டிற்கு அ.சா.6 யையும் அழைத்துச் சென்றுள்ளனர் என்பது புலனாகிறது. ஆனால் அ.சா.6 ரித்தீஸ் வீட்டில் நடந்தவை ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளதால் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, அதன் அடிப்படையில் கைப்பற்று மகசர் மூலம் எதிரியிடமிருந்து தடயப்பொருள் கைப்பற்றப்பட்டது என்பது ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்று மகசர் சாட்சியான அ.சா.6 ன் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்படாத நிலையில் அ.சா.6 ன் சாட்சியம் ஏற்றுக்கொள்ளும் படி இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

எ) இவ்வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1 ற்கு சிகிச்சை அளித்த தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவனையின் மருத்துவருக்கு பதிலாக சாட்சியம் அளித்த அ.சா.7 விமல்நாத் முதல்விசாரணை சாட்சியத்தில் Dr.நித்தியானந்தன் உதவி நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்தபோது அ.சா.7 அங்கு அதே பிரிவில் முதுநிலை பட்டப்படிப்பு படித்து பயிற்சியில் இருந்ததினால் அவருக்கு மேற்படி டாக்டர்.நித்தியானந்தன் என்பவரையும், அவருடைய கையொப்பமும் நன்கு தெரியும் என்றும், அவர் தற்போது பணி நிமிர்த்த காரணமாக வெளிநாட்டிற்கு சென்றுள்ள காரணத்தினால் S.C.24/2023 என்ற வழக்கில் மேற்படி நித்தியானந்தன் என்பவருக்கு பதிலாக சாட்சியம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.7 ற்கு சாட்சியம் அளிக்க மேல் அதிகாரி கொடுத்த நியமனக்கடிதம் தாக்கல் செய்துள்ளார். மேற்படி நியமனக்கடிதம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவரது சாட்சியத்தில் கடந்த 26.06.2021 ஆம் தேதியில் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் Dr.நித்தியானந்தம் உதவி நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சுமார் இரவு 07.10 மணியளவில் மயிலாடுதுறை தாலுக்கா, மன்னம்பந்தல் முளப்பாக்கம் தெற்குத்தெருவைச் சேர்ந்த மணி என்கிற மணிவேலன் என்பவர் அவரது ***தலை, முன்பக்க நெற்றி, ஆகிய இடங்களில் இரத்த சிராய்ப்பு காயத்தோடு வந்ததாகவும், அவருக்கு வலது கை நடுவிரல், இடது கை மூட்டு, இடது மணிக்கட்டு ஆகிய இடங்களில் வலி இருப்பதாக கூறியதாகவும், அவர் வீட்டில் இருக்கும்போது 25.06.2021 அன்று மாலை 03.30 மணியளவில் அடையாளம் தெரியாத 5 நபர்களால் கட்டையால் தாக்கப்பட்டதாக தாமாகக் கூறினார்*** என்றும், அவருக்கு ஏற்பட்ட தலையில் உள்ள பெரும்காயத்தினால் அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து 03.07.2021 ஆம் தேதி அன்று 02.00 மணியளவில் அவரை மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்து அனுப்பியதாகவும், அவருக்கு மண்டையில் ஏற்பட்ட பலத்த காயத்தினால் CT Scan எடுப்பதற்காக பரிந்துரை செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் அவருக்கு CT Scan எடுக்கப்பட்டதாகவும், அந்த விபத்துப்பதிவேடு அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், ***CT Scan ல் அவருக்கு வலது புறம்***

***<u>Temparol verital எலும்பு முறிவு ஏற்பட்டு மற்றும் இரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மற்றும் இடது முன்மூளை பகுதியில் Contussion எனப்படும் இரத்தக்கட்டு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றும், மேலும் இடது பக்கம் Frondo Temparol Verital, SubTural Temtoma என்ற இரத்தக்காயம் ஏற்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டு இருந்ததாகவும், இந்த காயத்தின் தன்மையின் அடிப்படையில் மணிவேல் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்ததாகவும்,</u>*** அந்த சான்று அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.7 ன் சாட்சியத்திலிருந்து அ.சா.1 ற்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பது புலனாகிறது.

ஏ) முதல் தகவலறிக்கை பதிவு செய்த அ.சா.8 சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் முதல் விசாரணை சாட்சியத்தில் 26.06.2021 அன்று மயிலாடுதுறை காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மணிவேலன் என்பவரை விசாரணை செய்ததில் அ.சா.1 Catering படித்துவிட்டு வீட்டில் இருந்து வந்ததாகவும், அவரது அம்மா, அவரது சகோதரிகள் அனைவரும் திருப்பூரில் தங்கி ஒரு கம்பெனியில் வேலை செய்து வந்ததாகவும், சத்தியசீலன் என்பவரின் மகள் ரிஸ்வானா என்பவரை 2 வருடமாக காதலித்து வந்த நிலையில் மேற்படி ரிஸ்வானா என்பவரின் வீட்டிற்கு தவணை பணம் வாங்கி கொடுத்திருந்ததாகவும், அந்த பணத்தை திருப்பி கேட்டபோது ரிஸ்வானாவின் சகோதரர் ரித்தீஸ், அவருடைய அம்மா ராஜலெட்சுமி ஆகியோருக்கும், அ.சா.1 ற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதாகவும், ரிஸ்வானாவுடன் பேசுவதை அவரது அம்மாவும், அவரது அண்ணனும் கண்டித்ததாகவும், 25.06.2021 அன்று மாலை சுமார் 5.00 மணிளவில் அ.சா.1 ம், ரிஸ்வானாவும் அவரது மாமா ராஜா வீட்டு வாசல் முன்பு நின்றுகொண்டு பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த ***ரிஸ்வானியின் அண்ணன் ரித்தீஷ் குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று திட்டி கீழே கிடந்த செங்கல்லை எடுத்து தன்னை ஓங்கி இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி தன் தலையின் பின் பக்கம்***

***மற்றும் முன் பக்கம், நெற்றியிலும் அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், தான் வலி தாங்க முடியாமல் கீழே விழுந்ததும் ரிஸ்வானாவின் அம்மா ராஜலெட்சுமி என்பவர் தன்னை குச்சிகாரி மகனே, தேவடியா மகனே எங்களை ஏண்டா தொந்தரவு செய்யிற என்று சொல்லி அங்கு கிடந்த கட்டையால் நெஞ்சு மற்றும் வலது கையில் அடித்ததாகவும் தான் வலி தாங்க முடியாமல் கத்தவே அங்கு இருந்தவர்கள் ஓடி வருவதை பாரத்து ரித்தீஸ் மற்றும் ராஜலெட்சுமி அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், தெருக்காரர்கள் அங்கு வரவில்லை என்றால் தன்னை அடித்து கொலை செய்திருப்பார்கள்*** என்றும், பின்னர் காயம் அடைந்த அ.சா.1 யை 26.06.2021 ஆம் தேதி காலை மயிலாடுதுறையில் உள்ள அருண்பிரியா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றும், பின்பு அங்கிருந்து கும்பகோணம் சுபம் மருத்துவமனைக்கும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையிலும் சிகிச்சைக்காக சேர்த்து சிகிச்சை பெற்றுக்கொண்டு இருப்பதாகவும், இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு கொடுத்த வாக்குமூலத்தை பெற்று 27.06.2021 ஆம் தேதி காலை 04.00 மணிக்கு மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண்.1481/2021, சட்டப்பிரிவுகள் 294(b), 324, 307 ன் படி வழக்கு பதிவுசெய்து, ஆய்வாளர் பார்வைக்கு வைத்தும், 13.07.2021 அன்று மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலைய பொறுப்பில் இருந்த மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் திருமதி. கோப்பெருந்தேவி என்பவர் அ.சா.8 யை விசாரிக்க நடந்த விபரத்தை கூறியதாக சாட்சியம் அளித்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.8 ன் சாட்சியத்திலிருந்து அ.சா.1 அடிப்பட்டு, மயிலாடுதுறை மருத்துவமனையிலும், அதன் பின்பு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும் சிகிச்சை பெற்றுள்ளார் என்பதும், சிகிச்சையில் இருந்தபோது அ.சா.1 யை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெற்று, வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் புலனாகிறது.

ஐ) புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 பாலசுப்ரமணியன் முதல்விசாரணை சாட்சியத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு மயிலாடுதுறை காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது மயிலாடுதுறை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் என்பவர் பதிவு செய்து அ.சா.9 ன் பார்வைக்கு மேல்

விசாரணைக்கு வைத்திருந்த மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண்.1481/2021 வழக்கு கோப்பை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 27.06.2021 ஆம் தேதி காலை 06.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கணேசன், காமராஜ், ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.11 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவுசெய்ததாகவும், பின்னர் ***<u>வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளை தேடிப்பார்த்ததில் 1ஆம் எதிரி ரித்தீஸ் என்பவரை அன்று பகல் 12.00 மணிக்கு மூங்கில் தோட்டம் பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து கைது செய்து சாட்சிகள் சம்பந்தம், கல்யாணசுந்தரம் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும்,</u>*** அந்த ஒப்பதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னர் எதிரியின் வீட்டிற்கு பின்புறம் மறைத்து வைத்திருந்த, அவர் எடுத்து ஆஜர் செய்த உடைந்த செங்கல் மற்றும் சவுக்கு உருட்டு கட்டை ஆகியவற்றை 27.06.2021 பகல் 14.30 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், ***<u>தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சான்று பொருட்கள் உடைந்த செங்கல் மற்றும் உருட்டு கட்டை எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான் என்றும்</u>***, பின்னர் கைப்பற்றப்பட்ட தடய பொருள் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து அன்றே எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், கைப்பற்றப்பட்ட தடய பொருளை படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், அந்த படிவம் 91 **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னர் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்று மகசர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்ததாகவும், பின்னர் அ.சா.9 பணி மாறுதலில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சென்றதால் புலன் விசாரணையின் வழக்கு கோப்புகளை நிலையத்தில் வைத்துச் சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.9 ன் சாட்சியத்திலிருந்து அ.சா.8 பதிவு செய்து வைத்திருந்த வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம்

சென்று பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்பதும், பின்னர் 1 ஆம் எதிரியை கைது செய்து, அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, அதன் அடிப்படையில் தடயப்பொருளான செங்கல் மற்றும் சவுக்கு உருட்டுக்கட்டை ஆகியவற்றை எதிரியிடமிருந்து கைப்பற்று மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார் என்பதும், பின்னர் தடயப்பொருளை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து வழக்குச் சொத்தாக்கியுள்ளார் என்பதும் புலனாகிறது. அதன்பிறகு அ.சா.9 ற்கு பணிமாறுதல் கிடைத்ததால் வழக்கு கோப்பினை நிலையத்தில் வைத்து சென்றுள்ளார் என்பது புலனாகிறது.

ஒ) இறுதி அறிக்கை தாக்கல் செய்த புலன்விசாரணை அதிகாரியான அ.சா.10 கோப்பெருந்தேவி முதல்விசாரணை சாட்சியத்தில் கடந்த 12.07.2021 ஆம் தேதி மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது மயிலாடுதுறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் விடுப்பில் இருந்ததால் அ.சா.10 பொறுப்பு காவல் ஆய்வாளராக பொறுப்பேற்று காவல் நிலைய குற்ற எண்.1481/2021, சட்டப்பிரிவுகள் 294(b), 324, 307 இதச என்ற வழக்கினை பார்வையிட்டதாகவும், இவ்வழக்கின் இரண்டாம் எதிரி இராஜலெட்சுமி என்பவர் நீதிமன்ற முன்ஜாமீனில் சென்றுள்ள விபரம் தெரிய வந்ததாகவும், இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி 1 ற்கு தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் காயச்சான்றிதழினைப் பெற்று, சாட்சி1 ற்கு ஏற்பட்டுள்ள காயம் கொடுங்காயம் என்று சான்று பெற்று வழக்கின் சட்டப்பிரிவினை 294(b), 324, 307 இதச என்பதை சட்டப்பிரிவுகள் 294(b) 324, 326, 307 இதச என மாற்றம் செய்து சட்ட மாற்று அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னர் காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவுசெய்தும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த மயிலாடுதுறை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 326, 307 இதசவின் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.10 ன் சாட்சியத்திலிருந்து

அ.சா.9 காவல் ஆய்வாளர் பணிமாறுதலில் சென்றதால் அவர் புலன் விசாரணை செய்து வைத்திருந்த வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டு, இவ்வழக்கில் காயமுற்ற அ.சா.1 சிகிச்சை பெற்ற மருத்துவமனைக்கு சென்று மருத்துவரை விசாரணை செய்து, காயச்சான்று பெற்று, கொடுங்காயம் என்று காயச்சான்று பெற்றதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 294(b) 324, 326, 307 இதச என மாற்றம் செய்து, வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்பது புலனாகிறது.

**7.** அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சியத்திலிருந்து A1 மற்றும் A2 எதிரிகளுக்கு பாதகமான அம்சங்களை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1) (ஆ)ன் படி கேள்வி எழுப்ப எதிரிகள் அவற்றை பொய் சாட்சிகள் என மறுத்தும், வழக்கு குறித்து பொய் வழக்கு என தெரிவித்தும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என தெரிவித்து, அதன் பிறகு எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படாததால் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**8. <u>எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துமூல வாதுரையின் சுருக்கம் :–</u>**

அ.சா.1 முதல் விசாரணையில் முளப்பாக்கம் என்ற ஊரில் நின்று கொண்டிருந்தபோது எதிரிகள் இருவரும் தாக்கினார்கள் என்றும், 161 (3) Crpc வாக்குமூலத்தில் 1வது எதிரி இத்தோடு ஒழிந்து போ என கூறியதாக உள்ளது, ஆனால் முதல் விசாரணையில் 2வது எதிரி இத்தோடு ஒழிந்து போடா என தாக்கியதாகவும் மாற்றி ஒன்றுக்கொன்று மாறுபட்டுள்ளது, 2வது எதிரியின் மகளை பேசாமல் உள்ளார் என கூறி அ.சா.1 கடுமையாக தாக்கியுள்ளார். அப்போது ஊர்கார்கள் விரட்டியதால் விழுந்து ஓடியுள்ளார். அதில் தான் அவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது அதனால் தான் முதல் விசாரணையிலும், போலீசார் வாக்குமூலத்திலும் முரண்பட்ட சாட்சியம் அளித்துள்ளார், அவரை எதிரிகள் தாக்கவில்லை, அ.சா.1 வேண்டுமென்றே கீழே விழுந்த காயத்தை பயன்படுத்தி எதிரிகள் வீட்டு பெண்ணை கொடுக்க மாட்டார்கள் என்ற விரோதத்தால் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார். ***அதனால் தான் 26.06.2021 சம்பவத்திற்கு மறுநாள் அருண்பிரியா***

***மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக தெரிவித்துள்ளார். எதிரிகளால் காயம் ஏற்பட்டிருந்தால் அன்றைய தினமே மருத்துவ சிகிச்சைக்கு சென்றிருப்பார், விபத்து பதிவேடு தாக்கல் செய்யவில்லை, மேல் சிகிச்சைக்கு சென்ற விபத்து பதிவேட்டிலும் அருண்பிரியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான குறிப்பு எதுவும் குறிப்பிடப்படவில்லை, அதன் பிறகு கும்பகோணம் சுபம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை,*** அதனை அரசுத் தரப்பில் நிரூபணமும் செய்யவில்லை, அ.சா.1 வாக்குமூலத்தில் ***தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த போது மயக்கநிலையில் இருந்ததாகவும், அப்போது மருத்துவரிடம் அவருடன் வந்த விக்னேஷ் என்பவர் 25.06.2021 அன்று தவறாக 3 மணிக்கு என்று கூறிவிட்டார் என வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவரை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்த நபர் வினோத்குமார் எனவும், சுயநினைவில் இருந்தார் எனவும் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும், அ.சா.1 தான் வீட்டில் இருந்தபோது அடையாளம் தெரிந்த 5 நபர்கள் தாக்கியதாக கூறப்பட்டுள்ளது, அதனை பற்றி அரசுத் தரப்பில் எவ்வித விளக்கமும் கொடுக்கப்படவில்லை***, அ.சா.4 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்று மகசர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளதால் தடயப்பொருட்கள் வழக்கிற்காக பின்னிட்டு உருவாக்கப்பட்டதாக தெரிகிறது. ***அ.சா.5 காவல் ஆய்வாளர் விசாரணையில் தகவல் கேள்விபட்டு வந்து, விக்னேஷ் என்பவருடன் அருண்பிரியா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாக கூறியுள்ளார், ஆனால் முதல் விசாரணையில் தானே அருண்பிரியா மருத்துவமனைக்கு அ.சா.1 யை சிகிச்சைக்கு அழைத்துச் சென்றதாக கூறியுள்ளார் ஒன்றுக்கொன்று முரண்படுகிறது***. அ.சா.6 ன் சாட்சியம் நம்பகத்தன்மை அற்றது என்றும், நித்தியானந்தம் என்பவர் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரியில் சிகிச்சை அளித்ததாக உள்ளது, ஆனால் சுஜிதா என்ற மருத்துவர் சிகிச்சை அளித்துள்ளார். அவரை சாட்சியாக விசாரணை செய்யவில்லை, நித்தியானந்தம் என்பவருக்காக மற்றொரு மருத்துவர் விசாரணை செய்ததில் முதலில் சிகிச்சை அளித்த அருண்பிரியா மருத்துவமனை தான் காயத்தன்மை பற்றி குறிப்பிட முடியும் என கூறியுள்ளார், அ.சா.1 முகத்தில் சிராய்ப்பு காயம் என்றும், செங்கல்லால்

அடித்திருந்தால் பெரிய அளவில் காயம் ஏற்பட்டு இருக்கும் என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார், xRay எதுவும் பார்த்து கருத்துரை வழங்கியதாக கருத்துரை சான்றில் குறிப்பிடவில்லை, ***அருண்பிரியா மருத்துவமனை மற்றும் கும்பகோணம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான எவ்வித சிகிச்சை ஆவணமும் தாக்கல் செய்யவில்லை*** என்றும், தான் காதலித்ததாக கூறும் பெண்ணை பெண் என்றும் பாராமல் பேசாமல் இருக்கிறாள் என்று கண்மூடித்தனமாக தாக்கி ஊரார் வந்தவுடன் ஓடிச்சென்று கீழே விழுந்துவிட்டு தனது காதலுக்கு தடையாக இருக்கும் எதிரிகளை பழிவாங்க மறுநாள் மருத்துவ சிகிச்சைக்கு சென்று புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். எதிரிகள் மீதான வழக்கு அரசுத்தரப்பில் சரிவர நிரூபிக்கப் படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமாய் எழுத்துமூல வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9. இவ்வழக்கினில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் :–**

அரசுத் தரப்பபில் A1 எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 326, 307 ன் கீழும், A2 எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324 ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? இல்லையா என்பதே ஆகும்.

**10. தீர்வு:–**

அரசு தரப்பு வழக்கானது அ.சா.8 சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் நிலைய பொறுப்பில் இருந்தபோது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1 மணிவேல் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் அ.சா.ஆ.10 முதல் தகவலறிக்கை பதிவு செய்து, மேல்விசாரணைக்கு வைத்த வழக்கு கோப்பினை அ.சா.9 பாலசுப்ரமணியன் ஆய்வாளர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று பட்டியல் சாட்சி 5 கணேசன் மற்றும் அ.சா.3 காமராஜ் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.11 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.12 மாதிரி வரைபடம் தயார் செய்து, மேற்படி பார்வைமகசரில் அ.சா.3 ன் கையெழுத்தை பெற்று, மேற்படி

அ.சா.3 ன் கையெழுத்தை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்து, பின்னர் 1 ஆம் எதிரி ரித்தீஷ் என்பவரை கைது செய்து, மேற்படி 1 ஆம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்று, மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்து, ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.4 ன் கையெழுத்தை பெற்று இரண்டாவதாக உள்ள அ.சா.4 ன் கையெழுத்தை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்தும், பின்னர் எதிரி ஆஜர் செய்த உடைந்த செங்கல் மற்றும் சவுக்கு உருட்டுக் கட்டை ஆகியவற்றை அ.சா.ஆ.14 கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி, மேற்படி கைப்பற்றுதல் மகசரில் அ.சா.4 ன் கையெழுத்தை பெற்று, கைப்பற்று மகசரில் இரண்டாவதாக உள்ள கையெழுத்தை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்தும், ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.6 ன் கையெழுத்தை பெற்று முதலாவதாக உள்ள அ.சா.6 ன் கையெழுத்தை அ.சா.ஆ.5 ஆகவும், கைப்பற்றுதல் மகசரில் அ.சா.6 ன் கையெழுத்தை பெற்று, மேற்படி முதலாவதாக உள்ள அ.சா.6 ன் கையெழுத்தை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்தும், பின்னர் அ.சா.10 கோப்பெருந்தேவி ஆய்வாளர் அ.சா.1 ற்கு சிகிச்சை அளித்த தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று காயச்சான்று பெற்று, மேற்படி காயச்சான்றின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 294(b), 324, 307 இதச., என்பதை சட்டப்பிரிவுகள் 294(b), 324, 326, 307 இதச., என சட்டப்பிரிவு மாற்றம் செய்து அ.சா.ஆ.16 சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்து, மேற்படி மருத்துவனையில் அ.சா.7 யை சாட்சியம் அளிக்க நியமனக் கடிதம் பெற்று, மேற்படி நியமனக் கடிதத்தை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்து, அ.சா.1 ற்கு கொடுத்த அ.சா.ஆ.8 விபத்து பதிவேடு மற்றும் கொடுங்காயம் என்று சான்றளித்த அந்த சான்றை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்தும், தடயப்பொருள்களை அ.சா.ஆ.15 படிவம் 91 மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்து, அதனை சான்றுபொருளாக குறியீடு செய்தும், பின்னர் எதிரிகள் மீதான விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 326, 307 ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வழக்கு அமைந்துள்ளது.

**11.** அரசுத்தரப்பு வழக்கறிஞர் வாதத்தில் அ.சா.1 ன் புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், பார்வைமகசர் மற்றும்

ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்று மகசர் சாட்சிகள் அவர்களது கையெழுத்துக்களை ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், அ.சா.1 ற்கு மேல் சிகிச்சை அளித்த மருத்துவமனையின் மருத்துவர் அ.சா.1 ற்கு ஏற்பட்ட காயத்தை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேற்படி மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட காயச்சான்றின் அடிப்படையில் தான் சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், புலன் விசாரணை செய்த அதிகாரிகளும் சம்பவயிடம் சென்று சாட்சிகள் கணேசன் மற்றும் காமராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், 1 ஆம் எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து, அதன் அடிப்படையில் தடயப்பொருளும் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு, சான்றுபொருளாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், தடயப்பொருட்களும் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்பட்டு, அ.சா.1 மற்றும் அ.சா.9 ன் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டானது அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு அரசு தரப்பு வழக்கறிஞர் வாதம் முன் வைத்தார்.

**12.** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில் அ.சா.1 அவரது சாட்சியத்தில் அடிப்பட்டவுடன் மயக்கம் வந்துவிட்டது, மீண்டும் 6 நாட்கள் கழித்து தான் மயக்கம் தெளிந்தது என்றும், மருத்துவரிடம் யார் விபரம் கூறியது என்று எனக்கு தெரியாது, மயக்கத்தில் இருந்தேன் என்றும், மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அவரது அம்மா அழைத்துச் சென்றதாகவும், அதன்பிறகு அவரது அம்மா கூறி தான் விவரம் தெரிந்து கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அ.சா.2 முதல் அ.சா.4 பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்கள் எனவே அவர்களது சாட்சியம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லை என்றும், பார்வை மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்று மகசர் சாட்சிகள் கையெழுத்துக்களை மட்டுமே ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.1 ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சாட்சியம் அளிக்கவில்லை, உடன் இருந்த மருத்துவரே சாட்சியம் அளித்துள்ளார். புகார் வாக்குமூலத்தில் 2 ஆம் எதிரி தன்னை தலையில் தாக்கியதாகவோ, பக்கத்தில் உள்ளவர்கள் சத்தம் கேட்டு ஓடிவந்தார்கள் என்றோ, 2 ஆம் எதிரி இத்தோடு செத்து

போடா என்று சொல்லி அடித்தார் என்றோ புகார் வாக்குமூலம் பெற்ற காவல் அதிகாரியிடம் கூறவில்லை என்றும், முதல் தகவலறிக்கை 2 நாட்களுக்குப் பிறகு தான் பதிவு செய்யப்பட்டுள்ளது, மருத்துவ சிகிச்சை எடுத்ததாக சொல்லும் அருண்பிரியா மருத்துவமனையிலிருந்து விபத்து பதிவேடு எதுவும் பெறவில்லை, வழக்கின் தடயப்பொருள் பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை, பார்வைமகசர், கைப்பற்றுதல் மகசர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது, எதிரியிடமிருந்து எந்த தடயப்பொருளும் கைப்பற்றப்படவில்லை, அ.சா.1 – 2 ஆம் எதிரியின் மகளை திருமணம் செய்வதாக கூறி தகராறு செய்து அவரை தாக்கியுள்ளார், அதனை மறைப்பதற்காக பொய்யான புகாரினை கொடுத்துள்ளார். அ.சா.9 விசாரித்த சாட்சிகளை அ.சா.10 மேல் விசாரணை செய்து விசாரிக்கவில்லை, அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது, எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று வாதம் முன் வைத்தார்.

**13.** மேற்படி, அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து அரசுத்தரப்பு சாட்சிகளால் சாட்சியங்கள் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளதா? என்பதை ஆராய்கையில், இவ்வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1 புகார் வாக்குமூலத்தையும், எதிரியையும் தடயப்பொருளையும் முன்னிலைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார். இருந்தபோதிலும் அ.சா.1 குறுக்கு விசாரணை சாட்சியத்தில் அடிபட்டவுடன் மயக்கம் வந்துவிட்டது, மீண்டும் 6 நாட்கள் கழித்து தான் மயக்கம் தெளிந்தது, மருத்துவரிடம் யார் விபரம் கூறினார்கள் என்று தெரியாது, நான் மயக்கத்தில் இருந்தேன் என்றும், மயிலாடுதுறை அருண்பிரியா மருத்துவமனைக்கு அ.சா.1 யை அவரது அம்மா சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதாகவும், கும்பகோணம் சுபம் மருத்துவமனைக்கும் அவரது அம்மா தான் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதாகவும், அடிப்பட்டவுடன் எந்தெந்த மருத்துவமனைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள், என்னென்ன சிகிச்சை செய்தார்கள் என்றும் 6 நாட்கள் வரை எனக்குத் தெரியாது என்றால் சரிதான், அதன்பிறகு எனது அம்மா விபரம் கூற தெரிந்து கொண்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மயிலாடுதுறை அரசு மருத்துவமனை மற்றும் கும்பகோணம் சுபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேடோ,

அல்லது மேற்படி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றதற்கான எவ்வித ஆதாரங்களோ தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், சம்பவம் நடைபெற்றது 25.06.2021 ஆம் தேதி மாலை சுமார் 17.00 மணியளவில் நடந்ததாக குறிப்பிட்டு, 6 நாட்கள் கழித்து தான் மயக்கம் தெளிந்ததாக அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் தஞ்சாவூர் மருத்துவமனையில் வழங்கப்பட்ட அ.சா.ஆ.8 விபத்து பதிவேட்டில் 25.06.2021 அன்று 3 மணியளவில் தன் வீட்டில் இருக்கும் பொழுது அடையாளம் தெரிந்த 5 நபர்களால் கட்டையால் தாக்கப்பட்டதாக தாமாகவே கூறினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து அ.சா.1 சம்பவம் நடந்ததாக கூறப்பட்ட மறுநாளே தஞ்சாவூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்பதும், தாமாகவே மருத்துவரிடம் விபரம் கூறியுள்ளார் என்பதிலிருந்து அ.சா.1 மயக்கநிலையில் இல்லை என்பதையும் அறியமுடிகிறது. மேலும், அ.சா.1 புகார் வாக்குமூலத்தில் முளப்பாக்கம் தெற்கு தெருவில் ராஜா என்பவரது வீட்டு வாசலில் நின்று கொண்டிருக்கும் போது சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில் விபத்து பதிவேட்டில் தன் வீட்டில் இருக்கும்போது அடையாளம் தெரிந்த 5 நபர்கள் தாக்கியதாக அ.சா.1 கூறியுள்ளார். மேலும், அ.சா.1 அவரது அம்மா மருத்துவமனையில் சேர்த்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அ.சா.ஆ.8 விபத்து பதிவேட்டில் வினோத்குமார் என்பவர் சேர்த்ததாக குறிப்பிட்டுள்ளதை காணமுடிகிறது. எனவே அ.சா.1 புகார் வாக்குமூலம், சாட்சியம் ஆகியவற்றில் சம்பவம் நடைபெற்ற இடம், மருத்துவமனையில் சேர்த்ததாக குறிப்பிட்டுள்ள மருத்துவமனை, மருத்துவமனையில் யார் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்பது குறித்து முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதை காணமுடிகிறது.

**14.** அ.சா.5 அவரது சாட்சியத்தில் காயமுற்ற அ.சா.1 யை அவரது தகப்பனாரான அ.சா.5 சந்திரசேகர் என்பவர் தான் சம்பவயிடத்தில் மயக்கமடைந்து கிடந்தவரை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கும், கும்பகோணம் சுபம் மருத்துவமனைக்கும் அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், எப்படி காயம் ஏற்பட்டது என்று அவரது மனைவி கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் காயமுற்ற அ.சா.1 அவரது அம்மா தான் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக கூறியுள்ளார். கேள்வியுற்ற சாட்சியான அ.சா.5 ன் சாட்சியத்திலிருந்து அவரது மகனான அ.சா.1 அடிபட்டு, சம்பவயிடத்தில் மயக்கமடைந்து கிடந்துள்ளார் என்பதும்,

மயக்கநிலையில் இருந்தவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளார் என்பதும் தெரியவந்தாலும், அ.சா.5ன் சாட்சியத்திலிருந்து அ.சா.1 எதிரிகளால் தான் தாக்கப்பட்டுள்ளார் என்பதும், அ.சா.1ற்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிரிகள் தான் காரணம் என்பதும் அ.சா.5ன் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும், அ.சா.5ன் சாட்சியம் சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து முரண்பட்டும் உள்ளது எனவே அ.சா.5ன் சாட்சியம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15.** இந்நிலையில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2, பார்வைமகசர் சாட்சியான அ.சா.3, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்று மகசர் சாட்சியான அ.சா.4 கல்யாணசுந்தரம் ஆகியோர் அரசுத்தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்ததால் அவர்கள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் அவர்களின் குறுக்கு விசாரணை சாட்சியத்திலிருந்து அரசுத் தரப்பிற்கு சாதகமான அம்சங்கள் எதுவும் வெளிப்படவில்லை.

**16.** ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்று மகசர் சாட்சியான அ.சா.6 ரித்தீஸ் வீட்டில் நடந்தவை ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளதாலும், எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, அதன் அடிப்படையில் கைப்பற்று மகசர் மூலம் எதிரியிடமிருந்து தடயப்பொருள் கைப்பற்றப்பட்டது என்பது ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்று மகசர் சாட்சியான அ.சா.6 ன் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்படாத நிலையிலும், அ.சா.6 எவ்விதமான சாட்சியத்தையும் முன்வைக்காத நிலையிலும், 1ஆம் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் தடயப்பொருள் கைப்பற்றப்பட்டது என்பது நிரூபணம் செய்யப்படாத நிலையில் அ.சா.6ன் சாட்சியம் ஏற்றுக்கொள்ளும் படி இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17.** இவ்வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1ற்கு சிகிச்சை அளித்த தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவனையின் மருத்துவருக்கு பதிலாக சாட்சியம் அளித்த அ.சா.7ன் சாட்சியத்திலிருந்து அ.சா.1ற்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது

என்பது நிரூபணம் செய்யப்பட்டாலும், சட்டப்பிரிவு 326ன் கீழான குற்றமானது நிரூபிக்கப்பட வேண்டுமென்றால் மேற்படி காயமுற்ற நபருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் ரிப்போர்ட்டுகள் அவசியமானவையாக கருதப்படுகிறன்றன. ஆனால் இவ்வழக்கில் அ.சா.1ற்கு ஏற்பட்ட காயமானது எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் ரிப்போர்ட்டுகள் மூலம் நிரூபணம் செய்யப்படாத நிலையில் 1ஆம் எதிரியின் மீதான சட்டப்பிரிவு 326ன் கீழான குற்றச்சாட்டானது நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அ.சா.1ற்கு ஏற்பட்ட காயம் 326ன் கீழ் நிரூபிக்கப்படவில்லை என்றாலும், பிரிவு 324 இதசவின் கீழ் குற்றவாளியாக கருதப்பட்டாலும் அ.சா.1யை தவிர மற்ற சாட்சிகளான கண்ணுற்ற சாட்சி மூலம் அ.சா.1ற்கு ஏற்பட்ட காயமானது நிரூபணம் செய்யப்படாததாலும், பார்வைமகசர் மூலம் சம்பவயிடம் நிரூபணம் செய்யப்படாததாலும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்று சாட்சிகள் மூலம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, எதிரியிடமிருந்து தடயப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்து, எதிரியையும், தடயப்பொருளையும் அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்காததை கருத்தில் கொண்டு எதிரிகளின் மீதான குற்றச்சாட்டானது நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதமன்றம் கருதுகிறது.

மேலும், அ.சா.1ற்கு ஏற்பட்ட காயமானது எதிரிகள் அ.சா.1யை தாக்கி, எதிரிகளால் தான் அ.சா.1ற்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்பது நிரூபணம் செய்யப்படாததாலும், அ.சா.1 தனது சாட்சியத்தில் அடிபட்டவுடன் மயக்கம் வந்துவிட்டது, மீண்டும் 6 நாட்கள் கழித்து தான் மயக்கம் தெளிந்தது, மயிலாடுதுறை அருண்பிரியா மருத்துவமனைக்கும், கும்பகோணம் சுபம் மருத்துவமனைக்கும் அவரது அம்மா தான் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார் என்றும், சம்பவம் நடந்து 6 நாட்கள் வரை மயக்க நிலையில் இருந்ததால் எதுவும் தெரியாது, அதன்பிறகு அவரது அம்மா விபரம் கூறி தெரிந்து கொண்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் மயிலாடுதுறை மற்றும் கும்பகோணம் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேடு தாக்கல் செய்யபடவில்லை, மேல் சிகிச்சைக்கு சென்ற விபத்து பதிவேட்டிலும் அருண்பிரியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான குறிப்பு

எதுவும் குறிப்பிடப்படவில்லை, அதன் பிறகு கும்பகோணம் சுபம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேலும், சம்பவம் நடைபெற்றது 25.06.2021 ஆம் தேதி மாலை சுமார் 17.00 மணியளவில் நடந்ததாக குறிப்பிட்டு, 6 நாட்கள் கழித்து தான் மயக்கம் தெளிந்ததாக அ.சா.1 சாட்சியம் அளித்துள்ள நிலையில் தஞ்சாவூர் மருத்துவமனையில் வழங்கப்பட்ட அ.சா.ஆ.8 விபத்து பதிவேட்டில் 25.06.2021 அன்று 3 மணியளவில் தன் வீட்டில் இருக்கும் பொழுது அடையாளம் தெரிந்த 5 நபர்களால் கட்டையால் தாக்கப்பட்டதாக தாமாகவே கூறினார் என்றும், சுயநினைவில் இருந்தார் எனவும் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து அ.சா.1 சம்பவம் நடந்ததாக கூறப்பட்ட மறுநாளே தஞ்சாவூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்பதும், தாமாகவே மருத்துவரிடம் விபரம் கூறியுள்ளார் என்பதிலிருந்தும், அ.சா.7 சுயநினைவில் இருந்தார் என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்தும் அ.சா.1 மயக்கநிலையில் இல்லை என்பதையும் அறியமுடிகிறது. மேலும் விபத்து பதிவேட்டில் வினோத்குமார் என்பவர் சேர்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அ.சா.7 ன் சாட்சியத்திற்கு முரண்பட்டு அ.சா.1 சாட்சியம் அமைந்துள்ளது. மேலும், அ.சா.ஆ.8 விபத்து பதிவேட்டிலிருந்தும் அ.சா.1 ன் சாட்சியம் முரண்பட்டுள்ளதால் அ.சா.7 ன் சாட்சியம் மூலம் அ.சா.1 ற்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பது நிரூபணம் செய்யப்பட்டிருந்தாலும், மேற்படி அ.சா.1 ற்கு ஏற்பட்ட கொடுங்காயத்திற்கு எதிரிகள் தான் காரணம் என்பது நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**18.** மேலும், முதல் தகவலறிக்கை பதிவு செய்த அ.சா.8 சிறப்பு உதவி ஆய்வாளரின் சாட்சியத்தின் மூலம் அ.சா.1 கொடுங்காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, வழக்கு பதிவு செய்துள்ளார் என்பது புலனாகிறது. இருந்தபோதிலும், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 சம்பவயிடம் சென்று பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்து, 1 ஆம் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, அதன் அடிப்படையில் தடயப்பொருள் கைப்பற்றப்பட்டதாக முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ள நிலையில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது 1 வது எதிரியிடமிருந்து எந்தவித தடய பொருளும் கைப்பற்றப்படவில்லை, அவர்

தாமாக எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் என்றும், அ.சா.1 – 6 நாட்கள் சுயநினைவில்லை என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.9 ன் சாட்சியத்திலிருந்து 1 வது எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் தடயப்பொருள் கைப்பற்றப்படவில்லை என்பதும், அ.சா.1 சுயநினைவில் தான் இருந்தார் என்பதும் புலனாகிறது. மேலும், அ.சா.9 வைத்து சென்ற வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட புலன் விசாரணை அதிகாரியான ஆய்வாளர் கோப்பெருந்தேவி அவரது புலன் விசாரணைக்கு வழக்கு கோப்பினை எடுத்துக்கொண்ட பிறகு சாட்சிகளை திரும்ப விசாரணை செய்து, எழுத்துமூல வாதுரை பெறாமல் அ.சா.9 விசாரணை செய்த சாட்சிகளை விசாரணை செய்ததாக சாட்சியம் அளித்திருந்தாலும், அவர்களை விசாரணை செய்ததாக எவ்விதமான சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே அ.சா.10 சாட்சிகளை திரும்ப விசாரணை செய்து, எவ்விதமான வாக்குமூலத்தையும் பெறாமல் அ.சா.9 விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளதை அப்படியே கோப்பில் எடுத்துக்கொண்டு, மருத்துவரிடம் மட்டும் விசாரணை செய்து, காயச்சான்று பெற்று, சட்டப்பிரிவு மாற்றம் செய்து, இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது புலனாகிறது.

**19.** மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம், இருதரப்பு வாதம், ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வழக்கினை பரிசீலனை செய்கையில் அ.சா.1 எதிரிகள் தாக்கியதாக புகார் வாக்குமூலம் கொடுத்து, சாட்சியம் அளித்திருந்தாலும் அ.சா.1 ன் சாட்சியம் சம்பவம் நடைபெற்ற இடம், மருத்துவனைகளில் சிகிச்சை பெற்ற விபரம், மருத்துவமனைகளில் யார் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்ற விபரம் அனைத்தையும் தன்னுடைய சாட்சியத்திலேயே முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதும், 6 நாட்கள் மயக்கநிலையில் இருந்ததாக கூறியுள்ள நிலையில் அ.சா.ஆ.8 விபத்து பதிவேட்டில் மறுநாளே மருத்துவரிடம் அடிப்பட்ட விதம் பற்றி கூறியுள்ளதும், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9– 1 வது எதிரியிடமிருந்து எந்தவித தடய பொருளும் கைப்பற்றப்படவில்லை, அவர் தாமாக எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும்

கொடுக்கவில்லை என்றால் சரிதான் என்றும், அ.சா.1 – 6 நாட்கள் சுயநினைவில்லை என்று சொல்லியிருந்தால் அது தவறு என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்தும், 1வது எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் தடயப்பொருள் கைப்பற்றப்படவில்லை என்பது புலனாகிறது. மேலும், பார்வை மகசர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் கையெழுத்துக்களை மட்டும் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்து, அரசுத்தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து சம்பவயிடமும், ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் தடயப்பொருள் கைப்பற்றப்பட்டது என்பதும் நிரூபணம் செய்யப்படாத நிலையில் அ.சா.7 மருத்துவரின் சாட்சியத்தின் மூலம் அ.சா.1ற்கு ஏற்பட்ட காயம் நிரூபணம் செய்யப்பட்டாலும், மேற்படி அ.சா.1ற்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிரிகள் தான் காரணம் என்பது நிரூபணம் செய்யப்படாததாலும் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் சம்பவமும், சம்பவயிடமும், மேற்படி சம்பவத்திற்கு எதிரிகள் தான் காரணம் என்பதும் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**20.** இந்நிலையில் வழக்கு பதிவு செய்த அ.சா.8 ன் சாட்சியத்தின் மூலம் புகார் வாக்குமூலம் பெறப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மட்டுமே அறியமுடிகிறது. புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 – 1வது எதிரியிடமிருந்து எந்தவித தடய பொருளும் கைப்பற்றப்படவில்லை, அவர் தாமாக எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்தும், அ.சா.10 சாட்சிகளை திரும்ப விசாரணை செய்து, எவ்விதமான வாக்குமூலத்தையும் பெறாமல் அ.சா.9 விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளதை அப்படியே கோப்பில் எடுத்துக்கொண்டு, மருத்துவரிடம் மட்டும் விசாரணை செய்து, காயச்சான்று பெற்று, சட்டப்பிரிவு மாற்றம் செய்து, இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதிலிருந்தும் அரசுத் தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யபடவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**21.** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வாதத்தில் அ.சா.1 – 2ஆம் எதிரியின் மகளை திருமணம் செய்வதாக கூறி தகராறு செய்து அவரை தாக்கியுள்ளார், அதனை

மறைப்பதற்காக பொய்யான புகாரினை கொடுத்துள்ளார். அ.சா.9 விசாரித்த சாட்சிகளை அ.சா.10 மேல் விசாரணை செய்து விசாரிக்கவில்லை, அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது, எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று முன் வைத்துள்ள வாதத்தை அரசுத்தரப்பில் பொய்பித்து, எதிரிகள் மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அ.சா.9 – 1வது எதிரியிடமிருந்து எந்தவித தடய பொருளும் கைப்பற்றப்படவில்லை, அவர் தாமாக எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து எதிரிகள் மேற்படி குற்றச்செயலில் ஈடுபட்டார்களா என்பதும், 1வது எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் தடயப்பொருள் கைப்பற்றப்பட்டதா என்பது சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் இவ்வழக்கு அமைந்துள்ளதாகவே கருதமுடிகிறது.

**22.** எனவே, அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் A2 எதிரி அ.சா.1யை குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று திட்டி, கீழே கிடந்த செங்கல்லை எடுத்து ஓங்கி சாட்சி 1ன் பின்பக்க தலை முன்பக்க நெற்றி ஆகிய இடங்களில் அவரை கொலை செய்ய வேண்டும் என்ற நோகத்தில் இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், A2 எதிரி ராஜலெஷ்மி சாட்சி 1யை குச்சிகாரி மகனே என் மகளை ஏண்டா தொந்தரவு செய்யுற என்று திட்டி, கட்டையால் சாட்சி 1ன் நெஞ்சி மற்றும் வலது கையில் அடித்து சொற்பகயாத்தை ஏற்படுத்தியதாகவோ தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும், மேற்படி சாராம்சங்களில் இருந்து மேற்படி சம்பவ சாட்சிகள், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உதவி புரியவில்லை என்பதால் சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது கொடுக்கப்பட்ட அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தின் அடிப்படையிலான இவ்வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு இந்நீதிமன்றத்தின் மூன்பு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு

வழங்கி எதிரிகள் இவ்வழக்கு குற்ற சாட்டில் இருந்து விடுவிக்கப்பட வேண்டியவர்கள் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**23. முடிவாக,** A1 எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 326, 307 ன் கீழும், A2 எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324 ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கிடமின்றி அரசுத்தரப்பில் மெய்ப்பிக்க தவறியதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து A1 எதிரி சட்டப்பிரிவுகள் 294(b), 326, 307 இதச மற்றும் A2 எதிரி சட்டப்பிரிவுகள் 294(b), 324 இதச., ஆகிய பிரிவுகளின் கீழும் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**24.** இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயப்பொருளான சி.பி.13/2023–ல் முன்னிலைப்படுத்தப்பட்ட சான்று பொருளான அயிட்டம் எண்.1 சுமார் 8.5 செ.மீ. நீளமும், 10 செ.மீ. அகலமும், சுமார் 6 செ.மீ. உயரமும் உள்ள உடைந்த செங்கல் ஒன்றும், சான்றுபொருளான அயிட்டம் எண். 2 சுமார் 69 செ.மீ. நீளம் உள்ள சவுக்கு உருட்டு கட்டை ஒன்று ஆகியவை எதற்கும் பயன்படாது என்பதால் இவ்வழக்கின் மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழித்திட உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் எதிரிகளாலும் அவர்களது பிணையாளர்களாலும் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைமுறி ஏதேனும் இருப்பின் அவைகள் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின் தானாக ரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கப்பட்டு, இன்று (25.03.2026) என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஓம்/திருமதி பி. சுதா),
முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:–**

**1. அரசு தரப்பில்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. மணிவேலன் |
| அ.சா.2 | திரு. கமல்ராஜ் |
| அ.சா.3 | திரு. காமராஜ் |
| அ.சா.4 | திரு. கல்யாணசுந்தரம் |
| அ.சா.5 | திரு. சந்திரசேகர் |
| அ.சா.6 | திரு. சம்பந்தம் |
| அ.சா.7 | திரு. விமல்நாத், தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவனையின் உதவி பேராசிரியர் |
| அ.சா.8 | திரு. ஆறுமுகம், சிறப்பு உதவி ஆய்வாளர் |
| அ.சா.9 | திரு. பாலசுப்ரமணியன், காவல் ஆய்வாளர் |
| அ.சா.10 | திருமதி. கோப்பெருந்தேவி, காவல் ஆய்வாளர் |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 27.06.2021 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 27.06.2021 | பார்வைமகசரில் இரண்டாவதாக உள்ள அ.சா.3 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | 27.06.2021 | கைப்பற்று மகசரில் இரண்டாவதாக உள்ள அ.சா.4 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | 27.06.2021 | ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவதாக உள்ள அ.சா.4 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.5 | 27.06.2021 | ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள அ.சா.6 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.6 | 27.06.2021 | கைப்பற்று மகசரில் முதலாவதாக உள்ள அ.சா.6 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.7 | 05.11.2025 | மருத்துவமனையின் நியமன கடிதம் |
| அ.சா.ஆ.8 | 26.06.2021 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.9 | 26.06.2021 | காயச்சான்று |
| அ.சா.ஆ.10 | 27.06.2021 | முதல் தகவலறிக்கை |
| அ.சா.ஆ.11 | 27.06.2021 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.12 | 27.06.2021 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.13 | 27.06.2021 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.14 | 27.06.2021 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.15 | 27.06.2021 | படிவம் 91 |
| அ.சா.ஆ.16 | 13.07.2021 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |

**<u>3. அரசு தரப்பில் சான்றுபொருட்கள்</u> :– சி.பி.13/2023**

சா.பொ.1 1. சுமார் 8.5 செ.மீ. நீளமும், 10 செ.மீ. அகலமும், சுமார் 6 செ.மீ. உயரமும் உள்ள உடைந்த செங்கல் ஒன்று

சா.பொ.2 2. சுமார் 69 செ.மீ. நீளம் உள்ள சவுக்கு உருட்டு கட்டை ஒன்று

**<u>4. எதிரி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>**– இல்லை.

(ஓம்/திருமதி பி. சுதா),
முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.

/உண்மை நகல்//

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம்
நேரிய வரைவு தீர்ப்புரை
அமர்வு வழக்கு எண்.24/2023,
நாள் 30.03.2026.